ஊராட்சி மன்றத் தலைவர், வையாவூர் ஊராட்சி
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திருமதி. N.ஜெயலட்சுமி.,

ந.க.எண்.039/2023 நாள் 20.10.2023

பொருள் - குடியிருப்பு மனைபிரிவு - வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் - வையாவூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.480/1B, 1C, 2, 522/34-3-ல் மொத்த விஸ்தீரணம் **0.33.59** ஹெக்டேர் (அ) **3359** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு வீட்டு மனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO: 106/2023 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 18 வீட்டு மனைகள் விற்பனை செய்ய வையாவூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை - 1. மாவட்டநகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.KCT0UCKI/2023/TCP நாள்.19.10.2023
2. வையாவூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். நாள். .10.2023
3. Thiru.G.Sugumaran & Thiru.G.Ellappan, No.34, C.N.Annadurai Street, Kanchipuram.

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், வையாவூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.480/1B, 1C, 2, 522/34-3-ல் மொத்த விஸ்தீரணம் **0.33.59** ஹெக்டேர் (அ) **3359** ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கான சாலைகள், பொது உபயோகம் மற்றும் மூலை முடுக்குகள் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு Blue Print-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, பொது உபயோகம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடுமின்சார வாரிய ஒழுங்கு முறை ஆணையத்திற்கும், வையாவூர் கிராம ஊராட்சியின் பெயரில் பத்திரபதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.3426/2023 நாள்.06.10.2023-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனைதொடர்ந்து பார்வை1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO: 106/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும், கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், பெயரிடப்படாத மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **18** வீட்டு மனைகள் விற்பனை செய்ய கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வையாவூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

- மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். KCT0UCKI/ 2023/TCP நாள்.19.10.2023-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்ற வேண்டும்.

- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள் மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6அடி X 4அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

N. Jayalakshmi
ஊராட்சி மன்றத் தலைவர்
வையாவூர் ஊராட்சி
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

Thiru.G.Sugumaran &
Thiru.G.Ellappan,
No.34.C.N Annadurai Street,
Kanchipuram.

நகல் - நகர் ஊரமைப்பு இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - இணை சார்பதிவாளர் (எண்.1) காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.